**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ. எண்.77** **நாள்.10.06.2019**

**பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் புதியதாக அமைக்கப்பட்ட 15 வள வகுப்பறைகள் துணை ஆணையாளர் (கல்வி) திரு.பி.குமாரவேல் பாண்டியன், இ.ஆ.ப., அவர்கள் திறந்து வைத்தார்.**

= = = = =

பெருநகர சென்னை மாநகராட்சியின் கல்வித்துறையின்கீழ் 281 பள்ளிகள் இயங்கி வருகின்றன. இப்பள்ளிகளில் மொத்தமாக 2018–2019ஆம் கல்வி ஆண்டில் 82,688 மாணவ மாணவியர் கல்வி பயின்றனர். 2018–2019 ஆம் கல்வியாண்டில் நடைபெற்ற பொதுத் தேர்வில் சென்னை பள்ளிகள் 10ம் வகுப்பில் 92.44%, 11ஆம் வகுப்பில் 93.50% மற்றும் 12ஆம் வகுப்பில் 90.49% பெற்று தேர்ச்சி பெற்றன.

சென்னை பள்ளிகளின் தேர்ச்சி விகிதத்தை அதிகரிக்கவும், மாணவ மாணவியர்களின் சேர்க்கையை அதிகரிக்கவும், சென்னை பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியருக்கு தரமான கல்வியினை வழங்கவும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்களின் அறிவுறுத்தலின்படி பல்வேறு விதமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சென்னை நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் 84 வள வகுப்பறைகள் செயல்பட்டு வருகின்றன. மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியில் பொலிவுறு நகர திட்டத்தின் கீழ் ரூ.1.75 கோடி மதிப்பீட்டில் மின்னணு வகுப்பறைகளை கொண்ட 28 பள்ளிகள் கட்டமைக்கப்பட்டு, அப்பள்ளி மின்னணு வகுப்பறைகளுக்கு தேவையான மின்னணு உபகரணங்கள் ரூ.6.16 கோடி மதிப்பீட்டில் Samsung நிறுவனத்தினால் வழங்கப்பட்டு வள வகுப்பறைகளாக (Smart Class) மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

இதே போன்று அண்ணா நகர் மண்டலம் புல்லா அவென்யூ பகுதியில் உள்ள சென்னை பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 15 வகுப்பறைகள் சுமார் 20 லட்சம் மதிப்பீட்டில் சென்னை மாவட்ட ரோட்டரி சங்க பங்களிப்புடன் வள வகுப்பறைகளாக (Smart Class) மாற்றியமைக்கப்பட்டன. இவ்வள வகுப்பறைகளை துணை ஆணையாளர் (கல்வி) திரு.பி.குமாரவேல் பாண்டியன், இ.ஆ.ப., அவர்கள் இன்று (10.06.2019) திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் சென்னை மாவட்ட ரோட்டரி சங்க ஆளுநர் திரு.பாபுபேரம், உதவி கல்வி அலுவலர் திருமதி.வசந்தி, தலைமை ஆசிரியர்கள் மற்றும் மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**